# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது: “வானதூதர் அனைவரும் புடைசூழ மானிடமகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்றுகூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப் பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப் பக்கத்திலும் நிறுத்துவது போல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். (மத் 25: 31-33)

# இளைஞர்கள் திருஅவையின் மகிழ்வின் நம்பிக்கை

### மறைமாவட்ட அளவிலான உலக இளையோர் தின செய்தி

இவ்வாண்டு நவம்பர் மாதம் 26ஆம் தேதி சிறப்பிக்கப்படும் 38வது மறைமாவட்ட அளவிலான உலக இளையோர் தினத்திற்கென, நம்பிக்கையில் மகிழ்தல் என்ற தலைப்பில் செய்தி ஒன்றை நவம்பர் 14ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவ நம்பிக்கை என்பது, நம்மிடையே இருக்கும் கிறிஸ்துவின் பிரசன்னம் குறித்து உணர்ந்துகொள்வது, மற்றும் இருண்ட காலங்களில் இந்த நேர்மறை எண்ணங்களை நிலைநாட்டவும், பகிரவும் திட்டங்களை பரிந்துரைப்பதாகும் எனக் கூறும் திருத்தந்தையின் செய்தி, இளையோரின் வாழ்வு என்பது, நம்பிக்கைகளும் கனவுகளும் நிறைந்து, இறைவன் படைப்பின் அழகு, நம்முடைய நண்பர்கள் மற்றும் அன்புகூர்பவர்களின் உறவுதொடர்பு போன்றவைகளால் நிறைந்து காணப்படும் ஒன்று என சுட்டிக்காட்டுகிறது.

நெருக்கடிகள் மற்றும் போரின் காலத்தில் இருக்கும் இளையோர், தங்கள் நம்பிக்கையை இழந்தவர்கள் போல் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கூறும்



*திருத்தந்தை பிரான்சிஸ் இளையோர்களோடு*

திருத்தந்தை, உலகில் துன்பங்களை, குறிப்பாக அப்பாவி மக்களின் துயர்களைக் காணும்போது மகிழ்வையும் நம்பிக்கையையும் எப்படிப் பெற முடியும் என அவர்கள் இறைவனை நோக்கி குரல் எழுப்புகின்றனர் எனவும் எடுத்துரைத்துள்ளார்.

இத்தகைய வேளைகளில் நாம் இறைவனுடன் ஆன சந்திப்பிலும், நமக்கான அவரின் அன்பிலும் நிலைத்திருந்து, துன்புறுவோர் மத்தியில் நம்பிக்கையை நிலைநாட்டுபவர்களாகவும், பிரச்னைகளுக்கான இறைவனின் தீர்வுகளில் நாமும் ஒரு பகுதியாகவும் இருக்க முடியும் எனக்கூறும் திருத்தந்தையின் செய்தி, நம்பிக்கையிழக்கும் நேரங்களில்கூட நம்பிக்கையையும் மகிழ்வையும் வழங்கும் இறையன்பின் அடையாளங்களாக நாம் செயல்படமுடியும் எனவும் கூறுகிறது.

நம்பிக்கையையும் மகிழ்வையும் பெற்றுள்ள நாம் அனைவரும் அவைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள கடமைப்பட்டுள்ளோம் என்ற கருத்தையும் திருத்தந்தையின் செய்தி முன்வைத்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், இளைஞர்களே திருஅவையின் மகிழ்ச்சியான நம்பிக்கை எனவும், எப்போதும் நகர்ந்து கொண்டிருக்கும் மனிதகுலத்தின் நம்பிக்கையாக இருப்பவர்களும் அவர்கள் தான் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், இளைஞர்களின் கைகளைப் பிடித்து நம்பிக்கையின் பாதையில் தான் நடக்க விரும்புவதாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது ஆர்வத்தை டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

*திமினா செலின் இராஜேந்திரன் – வத்திக்கான்*

# திருத்தொண்டர் ஞான செல்வம் அருள்பணியாளரானார்

கோலாலம்பூர்: அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு "(மத்.9:37) எனும் ஆண்டவரின் குரலுக்கு செவிமடுத்தார் திருத்தொண்டர் ஞான செல்வம். கடந்த 13.11.23 அன்று பெஸ்தாரி ஜெயா (பத்தாங் பெர்சுந்தை) புனித வனத்து சின்னப்பர் தேவாலயம் திருவிழா கோலம் பூண்டது. பங்குத்தந்தை கபிரியேல் ஜேம்ஸ் தலைமையில் மிகச்சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 50க்கும் மேற்பட்ட குருவானவர்களும் 20க்கும் மேற்பட்ட துறவற சகோதரிகளும் புடை சூழ பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் திருதொண்டர் குருவானவராக னருள் பொழிவு செய்யப்பட்டார். இவர் பங்கின் 2வது குருவானவர் ஆவார். ஏற்கெனவே அருட்தந்தை அல்பெர்ட் ஆரோக்கியசாமி, அருட்சகோதரிகள் சூசன், குளோரி ஆகியோரை பங்கு ஈந்துள்ளது.

இங்கு, கம்போங் சுங்கை டாராவில் 8.11.1977ல் திரு.திருமதி. பிரான்சிஸ் ரோனியின் தம்பதியினரின் 8 பிள்ளைகளில் தலைமகனாக பிறந்தார். 2 பெண்கள், 6 ஆண்கள். பத்தாங் பெர்சுந்தை தமிழ்ப் பள்ளியில் தனது ஆரம்ப கல்வியை துவக்கிய இவர் யூ.கே.எம். பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியை முடித்தார்.15 ஆண்டு காலம் வங்கித் துறையில் சிறுக சிறுக முன்னேறி வங்கி நிர்வாகியானார். உயர் ஊதியம், உயர் பதவி இவரை பொருளீட்டுத் துறையில் ஆர்வம் காட்ட வைத்தது.

ஆரம்பத்தில் பீடப்பணியாளர், இளைஞர் குழுவில் ஈடுபாடு காட்டினார். பின்னர் கல்வி, தொழிலில் ஈடுபாடு காட்டியதால் ஆலயத் தொடர்பு அற்றவரானார். இணைய வழி பண மோசடியில் பெரும் தொகை ஒன்றை இழந்தது இவரை மாற்றுச் சிந்தனைக்கு ஆளாக்கியது.

எது உண்மையான மகிழ்ச்சி என சிந்திக்க தூண்டியது. அதே வேளை திறன் செயல் அதிகாரியான சீன கிறிஸ்தவர் ஒருவர் அடிக்கடி இயேசுவைப் பற்றியும் அவரது தலைமைத்துவம் பற்றியும் பகிர்ந்து வந்தார். இப்புது அனுபவம் இவரை இறைவன் பக்கம் திருப்பியது. இறைவார்த்தை வாசிக்கவும் திருப்பலிக்கு செல்லவும் தொடங்கினார். இறை அழைத்தல் துளிர்விட துவங்கியது. பங்கு தந்தை மறைதிரு எட்வின் பீட்டர் அவ்வழைத்தலுக்கு உரமிட்டு வளர்த்தார். பல மறைமாவட்ட குருக்களோடு கலந்துரையாடினார். பெற்றோர் அனுமதியை பெற்றார். குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை செய்து முடித்தார்.



*பேராயர் மற்றும் பெற்றோருடன் அருள்பணி ஞான செல்வம்*

பேராயரின் ஆசீரோடு பினாங்கு காலேஜ் ஜெனரல் குருத்துவ கல்லூரியில் சேர்ந்தார். பல ஆயிரம் ஊதியம் பெற்ற அவருக்கு மாத அலவன்சாக வழங்கப்பட்ட 70.00 ரிங்கிட் பெரும் சவாலாக அமைந்தது.

*தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்*

# ‘இன்றைய குழந்தைகளே நாளைய திருஅவை’

# குழந்தைகளின் கனவுகளை மறுக்காதீர்!

குழந்தைகளை வளர்க்கும் பெற்றோரும் குழந்தைகளோடு, குழந்தைகளாக மாறி னால் மட்டும்தான் அவர்கள் நாளைய வெற்றியாளராக உருவெடுப்பார்கள்.

காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்தி கொள்ளு பாப்பா என்று பாரதியார் குழந்தைகளின் வாழ்வை நான்கு வரி பாட்டில் பாடிவிட்டுச் சென்றார்.

## குழந்தைகளும் திருஅவையும்

"இன்றைய குழந்தைகள் நாளைய திருஅவையை உருவாக்குகின்றனர். நாம் எந்த வழியில் அவர்களை உருவாக்கு கிறோமோ, அதுவே நமது திருஅவையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்" என்றால் மிகையாகது. எனவே, பாதுகாப்பான வாழ்விடம், ஆரோக்கியமான உணவு, சுத்தமான குடிநீர், விரும்பியவாறு கல்வி கற்கும் உரிமை, மகிழ்ச்சியாக விளையாடும் உரிமை என பல உரிமைகளும் சட்டங்களும் சட்டரீதியாக நடை முறையில் குழந்தைகளுக்குக் கிட்டவேண்டும்.

எதிர்கால திருஅவையை ஆளவிருக்கும் இன்றைய குழந்தைகள் புத்திசாலித் தனமாகவும் புதுமையான ஆற்றல் உடையவர்களாகவும் வளர வேண்டும். தூய மனம் கொண்ட இவர்களே நாளைய



நாளையத் திருஅவை உறுப்பினர்

பணியாளர்கள். இவர் களைக் கொண் டாடி மகிழும் நாள்தான் குழந்தைகள் தினம். வாழ்வில் மகிழ்ச்சியான பருவம் என்பது குழந்தை பருவம் தான். இது யாராலும் மறக்க முடியாத பசுமையான நினைவுகளை தந்திருக்கும்.

எந்தவொரு செயலுடைய ஆரம்பமும் சிறப்பாக இருக்கவேண்டும் என்பது தான் நம் அனைவருடைய எதிர்பார்ப்பு. “விளையும் பயிர் முளையிலே தெரியும்” என்பது முதுமொழி. “திருஅவையின் நாளைய எதிர்காலம் சிறுவர்களே”.

திருஅவையின் முன்னேற்றத்திற்கு அடித் தளமாக விளங்குவது குழந்தைப் பருவத்தில் கற்றுக்கொள்ளும் விடயங்கள்தான். குழந்தைப் பருவத்தில் நல்ல பழக் கங்களையும் மறைக்கல்வியையும் கற்றுக் கொடுக்க வேண்டும். வெறும் புத்தகங்கள் மட்டுமே சிறந்த கல்வி என்ற மனநிலை மாறி தங்கள் குழந்தைகளை, மற்ற குழந்தைகளுடன் பழக விட வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு இடையே உடன்பிறப்பு உணர்வும், உதவும் மனப்பான்மையும் வளரும் என்பது உண்மை. ஒரு கள்ளங்கபடமற்ற குழந்தையின் வடிவில் இறைவனே வாழ்கிறான் என்பது போல அந்த மழலைகளின் உலகம் மனிதர்களின் மனக் காயங்களுக்கு மருந்திடும்.

## திருத்தொண்டர் ஞான செல்வம் அருள்பணியாளரானார்

*முதல் பக்கத் தொடர்ச்சி.*

பல உடல் உள போராட்டங்களுக்கிடையே தன் 3 ஆண்டு கல்வியை முடித்தார். தொடர்ந்து கூச்சிங்கிலுள்ள புனித இராயப்பர் குருத்துவ கல்லூரியில் மேலும் 4 1/2 ஆண்டுகள் பயிற்சி பெற்றார். இடையிடையே பல தீபகற்ப, சபா, சரவாக் பங்குகளின் மேய்ப்பு பணி திட்டங்களில் தன் பங்களிப்பை வழங்கினார்.

5.6.23ல் அருளப்பர் பேராலயத்தில் திருத்தொண்டராக பேராயரால் திருநிலைப் படுத்தப்பட்டார் காணமல் போன ஆடு என ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இவர் இன்று குருத்துவத்தின் வழி நல்லாயனாக உருவெடுத் துள்ளார். இது மோசேயையும் இறைவாக்கினர்களையும் இறைவன்



அழைத்ததிற்கு ஒப்பாகும் என்றால் மிகை யாகாது. விழாவின் இறுதிப் பகுதியில் முதலாவதாகப் பேசிய பங்குத்தந்தை ஜேம்ஸ் கேபிரியேல் அவர்கள், இயேசு பெத்லகேமில் பிறந்ததால் பெத்லேகேம் மாட்சியுற்றது போல், புதியதொரு குருவின் பிறப்பால் பெஸ்தாரி ஜெயா மாட்சுயுற்றதாக பெருமிதம் கொண்டார்.

மேலும், அடுத்துவரும் ஆண்டுகளில் மேலும் சிலர் குருத்துத்திற்கு அப்பங்கில் இருந்து தோன்றுவர் என்ற நம்பிக்கையையும் வெளிப்டுத்தினார்.

அருள்பணி ஞான செல்வம் அவரது நன்றியுரையில் அவரை சோதித்தறிந்து குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்த அன்றைய பங்குத்தந்தை அருள்பணி எட்வின் பீட்டர் அவர்களுக்கும், அனுமதியும் ஆதரவும் தந்த பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களுக்கும், குருத்துவ அருள்பொழிவு விழாவை சிறப்பாக ஏற்று நடத்திய பங்குத் தந்தை ஜேம்ஸ் கேபிரியேல் அவர்களுக்கும், ஏற்பாட்டுக் குழு உறுப் பினர்களுக்கும், விழாவுக்கு அருகில் இருந்தும் தூரத்திலிருந்தும் வருகைத்தந்த குருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், அருள் பணியாளர் களுக்கும் தம்மை ஒரு குருவாகச் செதுக்கிய குருத்துவக் கல்லூரி பேராசிரியர்களுக்கும், திருவழிப்பாடு மற்றும் பாடற் குழுவினருக்கும், அனை வருக்கும் நன்றி மாலை சூட்டினார்.

இறுதியாகப் பேசிய பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் குடும்பத்தின் தலை மகனை ஆண்டவருக்கு அளித்த அவரது பெற்றோருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். மேலும், டிசம்பர் 31 வரை, கோலாலம்பூர் புனித யோவான் பேராலயத்தில் துணை பங்கு குருவாக கடமைகளை நிறைவேற்றுவார் என்று அறிவிப்பு செய்தார். மதிய உணவு உபசரிப்புடன் விழா இனிதே முடிவுற்றது.

*-ராயப்பன் சவரிமுத்து_ பெஸ்தாரி ஜெயா*

# அரசக் குருத்துவத்தில் நமக்கும் பங்குண்டு

இன்று நாம் திருவழிபாட்டு நாட்காட்டியில் இறுதிவாரத்தில் இருக்கிறோம். இறுதி ஞாயிறு – கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். ஆண்டின் தொடக்க மாக இயேசுவின் வருகையை கொண்டாடும் நாம், இன்று நிறைவாக, இயேசு உலகம் அனைத்திற்கும் அரசராக இருப்பதை நாம் நினைவுகூர்கிறோம்.

கிறிஸ்துவை நாம் குழந்தையாக, பால கனாக, இளைஞராக, மேய்ப்பனாக என்று பலவகையில் உருவகப்படுத்திப் பார்த்திருப் போம். ஆனாலும், இன்று திருஅவை கிறிஸ்துவை அனைத்துலகிற்கு அரசராக நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. அந்த அரசரும் இதுவரை நாம் பார்த்த இரக்கம், மன்னிப்பு மட்டும் இல்லாமல் நீதிவழங்கும் நடுவராகவும் நம் கண் முன்னே தோன்றுகிறார்.

முதல் வாசகத்தில் எசேக்கியேல் இறைவாக் கினர் கடவுளை பாதுகாப்பும் அரணும் கொண்ட ஆயராக நமக்குக் காட்டுகிறார். திருப்பாடல் ஆசிரியரும் தந்தை இறைவனை பசும்புல் மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லும் நல்லாயனாக நமக்கு காட்டுகிறார். ஆனால் நற்செய்தியில் இறைமகன் இயேசு ஆடுகளுக்கு ஆயனாக மட்டுமல்லாமல், செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் பிரிக்கும் அரசராக தம்மை வெளிப்படுத்துகிறார்,

உலகம் தோன்றியது முதல் நம்மைப் படைத்த இறைவன் ஒவ்வொரு நாளும் தயவு காட்டுகிறார். தேவையான அனைத் தையும் வழங்கும் நம் மீட்பர், இறுதிநாளில் கணக்குக் கொடுக்கும்போது நீதி தவறாது தீர்ப்பு வழங்குபவராக இரக்கத்தையும் மன்னிப்பையும் தள்ளிவைத்து, நீதியை தம் கையில் எடுத்து தீர்ப்பு வழங்குபவராய் இருக்கிறார்.

நாம் இப்போது இரக்கத்தின் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நாம் நம்மு டைய தவறான வாழ்க்கையை விட்டு, நன்மையின் பக்கம் வர இதுவே உகந்த காலம். இதை நாம் தவறவிட்டால், நம் தவறுகளுக்கு மன்னிப்பு இல்லை. தண்டனைத் தீர்ப்பு மட்டும் தான் உண்டு.

இறைவனுக்கு உகந்த வாழ்க்கை கடின மானதும் சவாலுக்குரியதுமாகும். நம்மைச் சுற்றியிருக்கும் ஏழை எளியோருக்கு நலிந்தவர்களுக்கு உதவி செய்வது. நமக்கான அழைப்பாகும். நம்மால் செய்யக் கூடிய செயல்களைத் தான் இறைவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்.

இரக்கச் செயல்களான, பசித்தோருக்கு உணவும், தாகத்தில் இருப்போருக்கு தண்ணீரும், வறுமையில் வாடுவோருக்கு உதவியும், மருத்துவமனை மற்றும் சிறையில் இருப்போரை சந்தித்தலும் நிச்சயமாக நம்மால் செய்யக்கூடிய இரக்கச் செயல்கள் தான். மேலும் நாம் நினைவில் கொள்ளவேண்டியது, நம் குடும்பத்தில் இருக்கும் முதியோர், தனிமையில் வாடுவோர் இவர்களை நாம் நம்முடைய இரக்கச் செயல்களால் எளிதாகச் சென்ற டையலாம்.

இறுதிக்காலம் என்பது எதுவரை என்று நமக்குத் தெரியாது. இன்று நமக்கு உதவி செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அது தான் நமக்கு கொடுக்கப்பட்ட இறுதி வாய்ப்பு என்று எண்ணி ஒவ்வொருநாளும் நன்மை செய்யப் பயன்படுத்திக்கொள்வோம். அப்போது தான் நம் அரசர் நமக்குத் தீர்ப்பு வழங்க வரும்போது, மகிழ்ச்சியோடு அவர்முன் நின்று முடிவில்லா வாழ்வுக்கு நாம் அழைத்துச் செல்லப்படுவோம்.

“ கிறிஸ்து அரசரே, எங்களுக்கு உமது அரசில் பங்கு தாரும்”

*ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர்**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசே 34: 11-12, 15-17 |
| தி.பா | 23: 1-2. 3. 5. 6 |
| 2-ம் வாசகம் | 1 கொரி 15: 20-26, 28 |
| நற்செய்தி | மத் 25: 31-46 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- கிறிஸ்து அரசர்**